ANDERSON SERANGOON JUNIOR COLLEGE

அண்டர்சன் சிராங்கூன் தொடக்கக் கல்லூரி

# JC2 PRELIMINARY EXAMINATION 2022

**உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்** | **தாள் 1**

**H2 TAMIL LANGUAGE AND LITERATURE** | **31ST AUG 2022**

**9577/1** | **1 Hour 15 Mins**

**Paper 1**

## <u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அவற்றின்படி வினாவுக்கு விடையெழுதவேண்டும்.

2. விடையைக் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதவேண்டும்.

3. பயன்படுத்தப்பட்ட அல்லது பயன்படுத்தப்படாத எந்தவொரு விடைப்புத்தகத்தையும் தேர்வு நடைபெறும் மண்டபத்திலிருந்தோ அறையிலிருந்தோ எடுத்துச் செல்லக்கூடாது.

4. நீங்கள் அங்கீகரிக்கப்பட்ட அகராதி ஒன்றினைப் பயன்படுத்தலாம்.

More papers at www.testpapersfree.com

இவ்வினாத்தாள் 3 அச்சிடப்பட்ட பக்கங்களைக் கொண்டுள்ளது.

## உயர்தரம் 2 - தமிழ்மொழி, இலக்கியம்

## தாள் 1

பின்வரும் தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றுக்கு மட்டும் 350 சொற்களுக்குக் குறையாமல் ஒரு கட்டுரை எழுதுக. (35 மதிப்பெண்கள்)

1. மாணவர்களை எதிர்காலத்துக்குத் தயார்படுத்தும் வகையிலேயே நம் நாட்டின் கல்விமுறை அமைந்துள்ளது. கருத்துரைக்க.

2. ‘உன்னை நம்பி நீ முன்னே போகையிலே பாதை உண்டாகும்,’ என்பது எந்த அளவுக்கு உண்மை? விளக்குக.

3. தன் பண்பாட்டை நிராகரிக்கும் மனிதன் வாழ்க்கையில் பல நன்மைகளை இழக்கிறான். கருத்துரைக்க.

More papers at www.testpapersfree.com

4. பின்வரும் படத்தில் காணப்படும் சூழலை அடிப்படையாகக்கொண்டு ஒரு கட்டுரை எழுதுக.




**********முற்றும்**********

"செய்வன திருந்தச் செய்"

More papers at www.testpapersfree.com

ANDERSON SERANGOON JUNIOR COLLEGE

JC2 PRELIMINARY EXAMINATION 2022

| | |
|---|---|
| **உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம்** | **தாள் 2** |
| **H2 TAMIL LANGUAGE AND LITERATURE** | **31st Aug 2022** |
| **9577/2** | **1 Hour 45 Mins** |
| **Paper 2** | |

<u>தேர்வு எழுதுவோர்க்கான குறிப்புகள்</u>

1. இவ்வினாத்தாளில் இரண்டு பிரிவுகள் உள்ளன.

2. 'அ' பிரிவில் ஒரு பனுவலும் அதனையொட்டி ஐந்து வினாக்களும் இடம்பெற்றுள்ளன. 'ஆ' பிரிவில் இரண்டு பனுவல்களும் அவற்றையொட்டி நான்கு வினாக்களும் இடம்பெற்றுள்ளன. இவ்விரு பனுவல்களையும் கருத்தூன்றிப் படித்து இவற்றையொட்டி அமைந்த வினாக்கள் அனைத்துக்கும் சொந்த நடையில் விடையெழுதவேண்டும்.

3. தேர்வாளர் கூறியதும் 'START' என்பதைக் 'கிளிக்' செய்து தேர்வெழுதத் தொடங்கவும்.

More papers at www.testpapersfree.com

<u>சுயவிடைக் கருத்தறிதல் (1)</u> <u>(32 மதிப்பெண்கள்)</u>

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படித்து, அதனடியில் காணும் வினாக்களுக்கு உன் சொந்த நடையில் விடை எழுதுக.

பண்டைக்காலப் பேரறிஞர்களான பிளேட்டோ, அரிஸ்டாட்டில், கன்பியூசியஸ் போன்ற மிகச் சிறந்த உலகச் சிந்தனையாளர்களின் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர் திருவள்ளுவர். வையகத்திலுள்ளோர் வாழ்வாங்கு வாழ வழிகாட்டுவது அவர் இயற்றிய திருக்குறளாகும். அதில் உள்ள குறள்கள் யாவும் தனிமனித வாழ்வுக்கும் சமூக வாழ்வுக்கும் வழிகாட்டும் வாழ்வியல் உண்மைகளை உள்ளடக்கியவை.

ஒரு நூல் எழுதப்பட்ட காலத்தில் கூறப்பட்ட கருத்துகள் சில காலத்துக்கு மட்டுமே <u>பொருந்துவதாக</u> பெரும்பாலும் இருக்கும். அப்படியான நூல்கள் நிலைத்து நிற்பது என்பது கடினமானதாகவே இருக்கும். ஆனால் எழுந்த காலம் தொடக்கம் முதல் இன்று வரை ஏன் இன்னும் பல காலங்களுக்கும் நிலைத்து நிற்கும் அளவுக்கு மனித வாழ்க்கைக்கான சிந்தனைக் கருவூலங்களைத் தன்னகத்தே கொண்டிருக்கும் பெருமை திருக்குறளுக்கு இருக்கிறது. அதனால்தான் அது வாழும் நூலாக இருக்கிறது. அறநூல்கள் பல வந்திருக்கின்றன. அவை யாவும் சமயம் சார்ந்தவையாகவும், தாம் கூறும் கருத்துகளை மட்டுமே முக்கியமாகக் கொள்ள வேண்டும் என்னும் தன்மையினவாகவுமே இருந்திருக்கின்றன. ஆனால் திருக்குறள், அறக் கருத்துகளைத் தாங்கி நின்றாலும் அது எந்தச் சார்பும் அற்றத்தாகவும், நடைமுறை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகவும் அமைந்து இருக்கிறது. இத்தன்மையால் அது இனம், மொழி, நாடு கடந்து யாவருக்கும் ஏற்றதாக இருக்கிறது.

மக்கள் மக்களாக வாழவேண்டும் என்றால் கல்வியறிவு முக்கியமாகும். உடல் வளர்ச்சி பெற்றுவிட்டால் வாழ்வு வாழ்வாகிவிடாது. எண்ண வளர்ச்சிக்கு உரிய நூலறிவு தான் மனிதனை மனிதனாக்கும் என்று வள்ளுவம் சொல்லுகின்றது. உலகம் முழுவதிலும் கல்வியின் நோக்கம் பற்றிய பல சிந்தனைகள் இருந்துள்ளன. அக்கால முடிமன்னரின் அரசியல் நெறிமுறைகளை வலுப்படுத்தும் கல்வி முறை பற்றி வள்ளுவர் சிந்தித்த போதிலும், அச்சிந்தனை அவர் வாழ்ந்த கால ஆட்சியாளர்களுக்கு மட்டும் என்றில்லாது, உலகோர் அனைவருக்கும் எக்காலத்தும் பொருந்துவதாகவே அமைந்துள்ளது. கல்விச் செல்வம் சேர்த்தோருக்கும் சேர்க்க <u>விழைவோர்க்கும்</u> கேடு விளைவிக்காது. கல்விச் செல்வமானது பொருட் செல்வத்தைப் போன்று தனியுடைமைச் செல்வமன்று. பொதுவுடைமைச் செல்வம். எனினும் அள்ள அள்ளக் குறையாதது. அளிப்பவருக்கும் இன்பமூட்டிப் பெறுபவரையும் களிப்படையச் செய்வது. கல்விக்கு வரம்பில்லை. அதனால்தான் 'கற்றது கைமண்ணளவு கல்லாதது உலகளவு' என்றனர். அச்செல்வத்தை அடையப்பெற்றோர் மொழி, இனம், நாடு ஆகிய <u>வரம்புகளைத்</u> தாண்டி, சென்ற இடமெல்லாம் சீரும் சிறப்பும், பேரும் புகழும் பெறுவர்.

More papers at www.testpapersfree.com

அடக்கமுடைமை என்ற ஒரு அதிகாரம் திருக்குறளில் உள்ளது. அடக்கம் என்பது ஒன்றும் செய்யாமல் வீணே இருப்பதன்று. நல்லன, தீயன ஆகியவற்றை ஆய்ந்து, உணர்வுகளைத் தீயனவற்றிலிருந்து நீக்கி நன்மை வழியில் செல்லுமாறு அடக்கி ஆள்வதாகும். கோபம் வந்து விட்டால் எதிரில் நிற்பவர் யார் என்று பார்ப்பதில்லை. நன்மை தீமை ஆராய்வதில்லை. யார்க்குக் கோபம் ஏற்படுகிறதோ அது அவரையும் அழித்து அவரை சார்ந்தவர்களையும் அழித்துவிடும் வல்லமை கொண்டதாகும். எதனைக் காக்காவிட்டாலும் நாவை அதாவது சொல்லும் சொற்களைக் கவனத்துடன் சொல்லுதல் அவசியம். பேசும் வார்த்தைகளே நம்மைப் பெருமைக்கும் சிறுமைக்கும் ஆளாக்க வல்லவையாகும். நா என்பதைக் காக்காவிட்டால் நாடே நலம் இழந்துவிடலாம். தனிமனித வாழ்வும் அழிந்துவிடலாம். வாய்ச்சொல் தவறிவிடாதபடி காப்பதே அவசியம். காரணம், தீ ஏற்படுத்தும் காயத்தைவிட பெரிய காயத்தை அது உண்டாக்கிவிடும். மன்னிக்கும் பண்பு தான் மனித வாழ்வியலில் எல்லோருக்கும் வேண்டிய ஒன்றாகும். அந்தப் பண்பு குறையும் பொழுதோ அல்லது இல்லாமல் போகும் பொழுதோ மனித வாழ்வு அர்த்தமற்றதாகி விடுகிறது. துன்பம் செய்தாலும் அதனைத் தாங்கி திருப்பி துன்பத்தைச் செய்யாமல் நன்மையே செய்யும்போது நம் நிலை உயரும். உள்ளுக்குள் ஒரு ஆத்ம திருப்தியே வந்து சேரும் என்ற வாழ்வியல் தத்துவத்தை வள்ளுவம் உணர்த்துகிறது.

நாம் அறநெறியை விட்டு விலகக்கூடாது என்பதை உணரவேண்டும். அறநெறியால் தான் இன்பம் பெறமுடியும் என்று புத்தர், திருவள்ளுவர் முதலான சான்றோர்கள் தெளிவாகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் தம் வாழ்க்கை அனுபவத்தால் கற்ற உண்மைகளை நம் நன்மைக்காகச் சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் கண் மூடி வாழ்ந்தவர்கள் அல்லர்; எவ்வளவோ எண்ணிப் பார்த்து, வாழ்ந்து பார்த்து, அவற்றால் தெளிந்த உண்மைகளை நாமும் உணர்ந்து நடக்கவேண்டும் என்று எண்ணி இருக்கிறார்கள். மின்விளக்கு முதலியவற்றை இயக்குகிறோம்; பழுது பார்க்கிறோம். அவற்றை இயக்குவதற்கான விதிகளை அலசி ஆராய்வதில்லை. அறநெறிகளையும் அவ்வாறே நம்பி பயன்படுத்துவது நல்லது.

எப்படியும் வாழலாம் என்று வாழ்பவருக்கு இப்படி வாழ்ந்து பாருங்கள் என்று வழிகாட்டுவது வள்ளுவம். அதனைப் பின்பற்றி வாழும்போது வாழ்வு இன்பமாக, இன்னலின்றி, அகமும் புறமும் தூய்மையாக இருக்கும்.

வினாக்கள். (24 மதிப்பெண்கள்)

1. திருக்குறள் வாழும் நூலாகவும் யாவருக்கும் பொருந்தக்கூடியதாகவும் உள்ளது என்று கூறுவதன் காரணம் என்ன? (6 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

2. கல்விச் செல்வத்தின் சிறப்பு யாது? (6 மதிப்பெண்கள்)

3. ஏன் பேசும் வார்த்தைகளில் கவனம் வேண்டும்? (6 மதிப்பெண்கள்)

4. அறநெறிகளை நம்பி பயன்படுத்தலாம் என்று கூறுவது எதனால்? (6 மதிப்பெண்கள்)

**5) சொற்பொருள்** **(8 மதிப்பெண்கள்)**

(i) பொருந்துவதாக

(ii) விழைவோர்க்கும்

(iii) வரம்புகளை

(iv) இயக்குகிறோம்

More papers at www.testpapersfree.com

'ஆ' பிரிவு

**சுயவிடைக் கருத்தறிதல் (2)** (33 மதிப்பெண்கள்)

பனுவல் ஒன்று

மனச்சோர்வை நீக்குவதில் பெற்றோரின் பங்கு

இன்றைய பரபரப்பான வாழ்க்கையில், செய்யும் அனைத்திலும் வெற்றிகளைக் குவிப்பதே அனைவரது நோக்கமாக உள்ளது. பிள்ளைகள் மீதும் இச்சுமை ஏற்றப்படுவது கவலைக்குரிய ஒன்றாகும். இதனால் வாழ்க்கையைத் தொலைத்து மனச்சோர்வுக்கு ஆளாகும் பிள்ளைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

இந்நிலைக்கான காரணத்தை ஆரம்பத்திலேயே அறிந்து பிள்ளைகளுக்கு உதவுவது பெற்றோரின் கடமையாகும். இன்றைய பிள்ளைகளுக்குப் பல்வேறு கவனச்சிதறல்கள் உள்ளன. இவற்றோடு போட்டித்தன்மையால் அதிகரிக்கும் கல்விச்சுமையும் அவர்களை வாட்டுகிறது. பள்ளிகள் பிள்ளைகளுக்கு ஆலோசனைகள் கொடுத்தாலும், அவர்களது மனச்சோர்வை நீக்க பெற்றோர் முக்கிய பங்காற்றவேண்டும். பிள்ளைகளின் மனதிற்கு ஆதரவான சூழலை உருவாக்குவதில் பெற்றோர்கள் கவனம் செலுத்தவேண்டும். வீட்டில் அமைதியும் மகிழ்ச்சியும் நிலவும்போது பிள்ளைகள் பாதுகாப்பான உணர்வினை

More papers at www.testpapersfree.com

அனுபவிப்பர்; எதிலும் சிறப்பாகச் செயல்படுவர். சில குடும்பங்களில் பிள்ளைகளுக்கு முன்னால் சண்டை போடுவது அவர்களது மனநிலையைப் பாதித்து, மனச்சோர்வினை ஏற்படுத்துகிறது. இன்று விவாகரத்துகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவது வருத்தத்துக்குரியதாகும்.

வாழ்க்கை பந்தயம்தான். ஆனால் ஓடும் வேகத்தில் மட்டும் குறியாக இருந்தால், அழகான தருணங்களை மனிதன் இழந்துவிடுவான். வேலை காரணமாக இன்று பலர் பிள்ளைகளோடு நேரம் செலவழிப்பதில்லை. அவர்களது பிரச்சினைகளையும் அறிவதில்லை. அதனால் தேவையான உதவிகளும் வழங்கப்படுவதில்லை. பிள்ளைகளுக்காக நேரம் ஒதுக்கி அவர்களோடு உரையாடி, அவர்களது அன்றாட அனுபவங்களைக் கேட்டறிவதால் அவர்களுக்கு ஏதேனும் பிரச்சினைகள் இருந்தால் அவற்றிற்குத் தீர்வுகள் கொடுக்கமுடியும். மேலும் பெற்றோர்கள் நேர்மறை எண்ணங்களைப் பிள்ளைகளது மனங்களில் விதைத்து பிள்ளைகளின் தன்னம்பிக்கையை வளர்க்கவேண்டும். இவற்றைத் தொடர்ந்து செய்தால் மனச்சோர்வினால் பாதிக்கப்படும் பிள்ளைகள் அதிலிருந்து மீண்டு வந்து பல சாதனைகளை மகிழ்ச்சியுடன் புரிவர்.

மோகன்

<u>பனுவல் இரண்டு</u>

<u>பிள்ளைகளின் மனச்சோர்வுக்குக் காரணமாகும் பெற்றோர்</u>

'பிள்ளைகளின் மனச்சோர்வை நீக்குவதில் பெற்றோரின் பங்கு' என்னும் கட்டுரை இன்றைய நடைமுறைக்குத் தேவையான ஒன்றாகும். பிள்ளைகளின் வளர்ப்பில் பெற்றோரின் பங்கு அத்தியாவசியமானது. ஆனால் இன்று சில பெற்றோரே பிள்ளைகளின் மனச்சோர்வுக்குக் காரணமாகின்றனர்.

பிள்ளைகள் தோல்விகளை எதிர்கொள்ளும்போதும் தட்டிக்கொடுத்து தைரியத்தை ஏற்படுத்தவேண்டும்; ஊக்கம் கொடுக்கவேண்டும். ஆனால் சிலரோ பிள்ளைகள் தேர்வில் சரியாக செய்யாவிட்டால், அவர்களைச் சிறப்பாகச் செய்த மாணவர்களோடு ஒப்பிட்டு தாழ்த்துகின்றனர். சிறுமைப்படுத்தப்படும் இப்பிள்ளைகள் தாழ்வு மனப்பான்மைக்குள் சிக்கி மனச்சோர்வுக்கு ஆளாகின்றனர். இத்தகைய செயல்களைப் பெற்றோர்கள் முதலில் நிறுத்தவேண்டும்.

உண்மையான கல்வி என்பது மனிதன் கற்கும் விழுமியங்களை அடிப்படையாகக் கொண்டதாகும். அதனால்தான் பள்ளிகளில் அறநெறிக் கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனால் விழுமியங்கள் முதலில் வீடுகளில் தொடங்கவேண்டும். அவற்றைப் பின்பற்றும்

More papers at www.testpapersfree.com

பிள்ளைகள், நன்மை-தீமைகளை உணர்ந்து சரியான வழியில் செல்வர். இதன்மூலம் மனச்சோர்வுக்கான நிலைகளைத் தாண்டி வருவர். ஆனால் இன்று மதிப்பெண்களுக்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுக்கும் குடும்பங்களின் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது இலட்சியம் மிக முக்கியமாகும். அதுவே அவனது வாழ்க்கைப் பாதையை நிர்ணயிக்கும். சாதனைகள் புரிவதற்கு ஒரு உந்துசக்தியாக அது திகழும். இன்றைய நடைமுறையில் பல பிள்ளைகளின் இலட்சியங்கள் அவர்களது பெற்றோர்களால் நிர்ணயிக்கப்படுகின்றன. இவர்கள் பிள்ளைகளின் விருப்பங்களை அறிந்துகொள்வதில்லை. அப்படியே அறிந்திருந்தாலும் அதற்கு மதிப்பு கொடுப்பதில்லை. இப்படி பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளுக்காகவே வாழவேண்டிய நிலையாலும் பிள்ளைகளுக்கு மனச்சோர்வு ஏற்படுகிறது.

பிள்ளைகளால் மனச்சோர்வை எதிர்கொள்ள முடியவில்லையென்றால் அது விபரீத முடிவுக்கும் இட்டுச் செல்லலாம். கண் கெட்ட பின் வருந்துவதால் பயன் இல்லை. பிள்ளைகளையும் உணர்வுள்ள மனிதர்களாக பார்க்க பெற்றோர்கள் கற்றுக்கொள்ளவேண்டும்.

நகுலன்

<u>வினாக்கள்</u>

6. கொடுக்கப்பட்டுள்ள இலக்கணக் குறிப்புகளுக்கு ஏற்ப வாக்கியத்திலிருந்து சொற்களைத் தேர்ந்தெடுத்து எழுதுக. (பனுவல் 1) (6 மதிப்பெண்கள்)

ஆனால் ஓடும் வேகத்தில் மட்டும் குறியாக இருந்தால், அழகான தருணங்களை மனிதன் இழந்துவிடுவான்.

அ) செயப்படுபொருள் :

ஆ) பெயரெச்சம் :

இ) பெயர் அடைமொழி :

7. வீடுகளில் ஆதரவான சூழல் இல்லாதபோது பிள்ளைகள் எவ்வாறு பாதிக்கப்படுவார்கள்?

(பனுவல் 1) (5 மதிப்பெண்கள்)

More papers at www.testpapersfree.com

8. பிள்ளைகளின் மனச்சோர்வுக்குப் பெற்றவர்களே காரணமாகின்றனர் என்பதை இரு பனுவல்களின் துணைகொண்டு நிறுவுக. (7 மதிப்பெண்கள்)

9. பிள்ளைகளின் மனச்சோர்வை நீக்குவது பெற்றோர்களின் செயல்பாடுகளிலேயே உள்ளது என்று கூறுவது ஏற்புடையதா? கொடுக்கப்பட்டுள்ள இரு பனுவல்களை அடிப்படையாகக் கொண்டு உன் கருத்துகளைத் தக்க சான்றுகளுடன் 140 சொற்களுக்கு மிகாமல் எழுதுக. (15 மதிப்பெண்கள்)

*****முற்றும்*****

More papers at www.testpapersfree.com

ANDERSON SERANGOON JUNIOR COLLEGE

அண்டர்சன் சிராங்கூன் தொடக்கக் கல்லூரி

# JC2 PRELIMINARY EXAMINATION 2022

| | | |
|---|---|---|
| உயர்தரம் 2 தமிழ்மொழி, இலக்கியம் | | தாள் 3 |
| **H2 TAMIL LANGUAGE AND LITERATURE** | | **16TH SEPT 2022** |
| **9577/3** | **3 Hours** | |

## தேர்வு எழுதுவோருக்கான முக்கியக் குறிப்புகள்:-

1. கொடுக்கப்பட்டுள்ள குறிப்பைப் படித்து நன்கு புரிந்துகொண்டு அதன்படி வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும்.

2. விடைகள் அனைத்தையும் கொடுக்கப்பட்டுள்ள விடைப்புத்தகத்தில் எழுதவேண்டும்.



More papers at www.testpapersfree.com

முக்கிய குறிப்பு: ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு வினாவிற்கு விடை எழுதவேண்டும். மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை எழுதவேண்டும்.

## 'அ' பிரிவு

நாவல், சிறுகதை

1. 'சமுதாய வீதி' என்னும் நாவலின் முதன்மை கதாப்பாத்திரங்களான முத்துக்குமரன் மற்றும் கோபால் ஆகியோரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய வாழ்க்கைப் பாடங்கள் பல உள்ளன என்று கூறலாமா? விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

2. சமூகத்தில் உள்ள குறைகளை எடுத்துக்காட்டும் வகையில் 'தேடல்' மற்றும் 'நாடோடிகள்' சிறுகதைகள் எழுதப்பட்டுள்ளன என்ற கருத்தினை இரு சிறுகதைகளின் துணைகொண்டு ஆராய்க.

(25 மதிப்பெண்கள்)

## 'ஆ' பிரிவு

கவிதை

3. வெறும் உளிக்கீறல்களாக நம் வாழ்க்கை அமையக்கூடாது என்றால் எத்தகைய வாழ்க்கையை நாம் வாழவேண்டும்? 'கல்லின் காயம்' என்ற கவிதையில் கவிக்கோ அப்துல் ரகுமான் பதித்துள்ள கருத்துகளைக் கொண்டு விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

4. நட்பு குறித்த ஆழ்ந்த புரிதலை முன்றுறையாரின் அனுபவ வரிகள் நமக்கு ஏற்படுத்துகின்றன என்பதை நீ ஏற்றுக்கொள்கிறாயா? விளக்குக.

(25 மதிப்பெண்கள்)



More papers at www.testpapersfree.com

## 'இ' பிரிவு

நாடகம்

5. 'சிங்கப்பூரைச் சொந்த நாடாக கருதாது பணம் சம்பாதிக்கும் ஓர் இடமாக மட்டுமே பார்த்தவர்கள் இங்கு வந்த குடியேறிகள்.' - 'சிங்கப்பூர் மாப்பிள்ளை' என்னும் நாடகத்தின் வழிநின்று கருத்துரைக்க.

(25 மதிப்பெண்கள்)

6. '...கடந்த காலமோ திரும்புவதில்லை, நிகழ்காலமோ விரும்புவதில்லை, எதிர்காலமோ அரும்புவதில்லை...,' என்ற வரிகள் வரதராஜனின் வாழ்க்கையைப் பிரதிபலிக்கின்றன. 'ஊஞ்சல்' என்னும் நாடகத்தின் வழி நின்று விளக்குக.

(25 மதிப்பெண்கள்)

## 'ஈ' பிரிவு

இலக்கியத் திறனாய்வு

7. பின்னிணைப்பு 1ல் கொடுக்கப்பட்டுள்ள 'கண்ணாடி நினைவுகள்' என்னும் தலைப்பிலான சிறுகதையைப் படித்து திறனாய்வு நோக்கில் பாத்திரப்படைப்பு, கதாசிரியர் உணர்த்த விரும்பும் கருத்துகள், உத்திகள் ஆகியவற்றை விளக்கி எழுதுக.

(25 மதிப்பெண்கள்)

8. பின்னிணைப்பு 2ல் கொடுக்கப்பட்டுள்ள 'பட்ட மரம்' என்னும் தலைப்பிலான கவிதையைப் படித்து அதன் நயத்தை விளக்கி எழுதுக. கவிதையின் பொருள் நயம், ஓசை நயம்,



More papers at www.testpapersfree.com

அணிச் சிறப்பு ஆகிய கூறுகளையொட்டி விடை அமைதல் வேண்டும்.

(25 மதிப்பெண்கள்)

**********முற்றும்**********

"செய்வன திருந்தச் செய்"

## பின்னிணைப்பு 1

### கண்ணாடி நினைவுகள்

சிட்டி ஹால் பெருவிரைவு ரயில் நிலையத்தில் இருந்து நகர்ந்த ரயிலில், 'டிங்.. டிங்.. டிங்..' என்ற ஒலியைத் தொடர்ந்து, "நெக்ஸ்ட் ஸ்டேஷன் ஈஸ் இரா∴பிள்ஸ் பிளேஸ், பேசஞ்சர்ஸ் ஹூ ஆர் கோயிங் டு தஞ்சோங் பகார், பூன்லே அண்ட் சுவா சூ காங், பிளீஸ் கிராஸ் த வெஸ்ட் பவுண்ட் டிரெய்ன்" என ஆங்கிலத்தில் அறிவிப்பு.

சீன, மலாய் மொழி அறிவிப்புகளைத் தொடர்ந்து "அடுத்த நிலையம் இரா∴பிள்ஸ் பிளேஸ் சந்திப்பு, தஞ்சோங் பகார், பூன்லே மற்றும் சுவா சூ காங் நோக்கிச் செல்லும் பயணிகள் நடைபாதையைக் கடந்து மேற்கே செல்லும் வண்டியில் ஏறுங்கள்" என மதுரத் தமிழில் அறிவிப்பு.

நல்ல குளிர் நிலவும் உட்புறத்தைக் கொண்ட ரயில், இரா∴பிள்ஸ் பிளேஸ் சந்திப்பில் நின்றது. நடைபாதையோரம் உள்ள கதவுக்கு மேல் உள்ள சிவப்பு விளக்குகள், அழகிய புன்னகை சிந்திட, நடைபாதையோரக் கதவுகளும் ரயில் கதவுகளும் போட்டி போட்டுக் கொண்டு திறந்தன.

ஜூரோங் செல்ல வேண்டிய திரு. குமரேசன், அந்தக் குறுகிய நேரத்தில் மணி ஆறாகி விட்டதா எனப் பார்த்தபடி செய்தித்தாளுடன் ரயிலிலிருந்து வெளியே வருகையில் திடீரென உள்ளே புயல் போல் நுழைந்த இளையர் தெரியாமல் கை தவறுதலாகச் செய்தித்தாளைத் தட்டிவிட, தரையில் விழுந்த செய்தித்தாளை எடுக்கக் குனிந்த குமரேசனின் சட்டைப் பையிலிருந்து பழுப்பு நிறக் கண்ணாடி நடைபாதைக்குக் கீழே உள்ள தண்டவாளப் பகுதியில் விழுந்துவிட்டது.

"அய்யோ" என்கிற ஓலத்துடன் கையில் செய்திதாளைப் பிடித்தபடி ரயிலில் நிற்பதா, கதவு மூடுமுன் வெளியேறுவதா எனப் புரியாது திகைத்தவர் கணநேரத்தில் வெளியே வந்துவிட்டார். அலைபாய்ந்திடும் மனத்துடன் நிற்கும் குமரேசனின் காதில், ஏதோ செய்தி தொடர்பான உரையாடலின் இடையே, "தீஸ் ஆர் த ∴பேக்ட்ஸ் ஆ∴ப் லை∴ப்; வீ ஹேவ் டு அக்செப்ட் தெம்" என்கிற மூவரில் ஓர் இளையர் பேசிய தத்துவமும் அழையா விருந்தாளியாய் வந்து விழுந்தது. தன்னையறியாது திரும்பிப் பார்த்தவருக்குக் கண்ணாடியின் நினைவு வந்தது.



More papers at www.testpapersfree.com

ஆம்... அது அவரது அன்புக் கண்ணாடி! பதினைந்து வயதில் தூரப் பார்வைக் குறைவால் ஆசிரியர் கரும்பலகையில் எழுதியதைப் படிக்க இயலாததால் கண்ணாடி போட ஆரம்பித்தார். அப்போது கண்ணாடியின் விலை, சில வெள்ளிப் பணம். ஆனாலும், சாலையைக் துப்புரவு செய்யும் அவரது தந்தைக்கு அது ஒரு பெருஞ்செலவு.

ஓரளவு தமிழ்ப் பள்ளிப் படிப்பு முடித்தவர், பதினேழு வயதில் ஓர் அலுவலகத்தில் குமாஸ்தாவானார். தன் நான்கு தம்பிகளையும் ஒரு தங்கையையும் விரலுக்குத் தகுந்த வீக்கத்தில் செலவழித்துக் கரையேற்றிவிட்டுத் தானும் கரையேற நினைத்தபோது, வயது முப்பத்திரண்டு! அதற்கிடையில் அவரது கண்ணாடிக்கு வயது பதினேழு. பெற்றோர் பார்த்த அவரது தூரத்துமுறை பெண் கண்ணகியை மணந்தார். கண்ணகி சிலேத்தார் பகுதியில் வெள்ளைக்காரத் துரைமார் வீட்டில் பகலில் வீட்டுவேலை செய்பவள். தமிழ்ப்பற்றின் காரணமாக அவளுக்குக் கண்ணகி என்று பெயர் வைத்த அவள் தந்தையைப் பாராட்டத்தான் வேண்டும். கற்பிலும் அவள் பெயருக்கேற்ப விளங்கினாள்.

அவள் கறுப்பு நிறம்தான். அந்த உடலின் சிறப்பாக விளங்கும் முகத்தில் பழுத்த மஞ்சள் எப்போதும் பளபளக்கும். வட்டவட்டமாக முடிச்சுருள்கள் நெளியும் நெற்றியில் சிவந்த குங்குமப்பொட்டு, திராட்சை போன்ற கண்கள், அடுத்து அணி செய்யும் கூரிய மூக்கு, கோவைப்பழ உதடுகள், வெற்றிலை போட்டுச் சிவந்ததால்தான் கோவைப்பழ நிறம். மெல்லிய உடல்வாகு, விரும்பி அணிவது, 'பாஜூகுரோங்' உடை. அத்துடன் பார்க்க நாகரிகமாகவும் இருப்பாள்.

எளிமையில் இனிமையைக் குமரேசனுக்குத் தந்த அவள், தன் கணவனிடம் தன் 'சின்ன' ஆசையைத் தெரிவித்தாள். "நீங்க எப்பவும் வேலைக்குப் போகும்போது கண்ணாடி போடுவீங்கதானே! நான் உங்களுக்கு ஓர் அழகான பழுப்பு நிறக் கண்ணாடி வாங்கித் தரேங்க" என்றாள். "அட.... நமக்குப் புது கண்ணாடியா?" என்ற குமரேசனின் மனத்தில் ஒரு குழி தோண்டி அதில் ஒரு பானை ஐஸ்கட்டிகளைக் கொட்டி வைத்தது போன்ற மகிழ்ச்சி; இனம் புரியாத உணர்வு. ஆம்! அந்த வாக்கை நிறைவேற்றிவிட்டாள் கண்ணகி. அன்று முதல் அதைத் தன் உயிராய்ப் பாதுகாத்து வந்தார் அவர். "எனக்கு மட்டும் கிட்டப் பார்வைக் குறை இருந்திருந்தால் கண்ணாடியைக் கண்ணிலேயே போட்டிருப்பனே! சட்டைப் பையில் வச்சிருக்க மாட்டேனே! ச்சூ.." என்று அவர் புதுக் கண்ணாடியைப் போடுமுன் அது முழுதும் அன்பு முத்தம் பதித்துத் தந்த மனைவியை நினைத்தார். முகம் முழுதும் வியர்த்தது. "இது என்ன வெள்ளைக்கார முதலாளி வீட்டுல இருந்து உங்ககிட்ட ஒட்டிக்கிட்ட நாகரிகமோ?!" என்று அவர் கேட்டதும் நாணத்தில், குப்பென்று சிவந்தவளை நினைத்தார். இப்போது ஒருவிதப் புன்னகையை உதிர்த்தார்.

இத்தனை பாசமான மனைவிதான், அவரை ஒரு முழு ஆணாக மாற்றியவள். அவரைக் குடும்பத்தலைவர் என்ற முறையில் தெய்வமாக மதித்தவள், பெற்ற மகனுக்கும் மகளுக்கும் நல்ல பழக்கவழக்கங்களைக் கற்றுக் கொடுத்தவள். ஆசைக்கு வந்த பெண்ணை அமெரிக்காவிலும் ஆஸ்திக்கு வந்த மகனை



More papers at www.testpapersfree.com

ஆஸ்திரேலியாவிலும் வாழவைக்க இரத்தத்தை வியர்வையாய் உதிர்த்தவள்.

புத்தியும் சாதுர்யமும் உள்ள அவள், தன் பேரக் குழந்தைகளைப் பார்க்கக் கொடுத்து வைக்காதவளாகிவிட்டாள். கஷ்டப்பட்டு வேலை செய்யும் கணவனின் கால்வலிக்கு, சூப் வைத்துத் தர ஆட்டுக்கால் வாங்கப் போனவள் போனவள்தான்! பேருந்து மோதி நடுச்சாலையில் கிழித்துப்போட்ட பருத்திப்பூவாய் மருத்துவமனையில் கிடந்தாள். செய்திக் கேட்டுப் பதறிப்போய் மருத்துவமனைக்கு ஓடியவர் வந்ததும் பார்த்தது கடைசியாக ஒளிர்ந்த அவளது கண்கள் மட்டும்தான். அவ்வளவுதான்! சடலத்தைத் தூக்கிவரும் பாக்கியம்தான் கிடைத்தது!

அந்தப் பூவின் நினைவான கண்ணாடி இன்று தவறி விழுந்து தண்டவாளத்தில் படுத்திருக்கிறது. என்னென்னவோ நினைவுகள்! இதற்கிடையில் மணி ஆறரையாகி விட்டது. எதிரே பூன்லே செல்லும் வண்டி வந்தது. நடைபாதையில் உள்ள கதுவுகளுக்கு மேல் விளக்குகள் ஒளிர, உள் கதவுகள் திறக்க மக்கள் வெளியேயும் உள்ளேயும் வந்து போய்க் கொண்டிருந்தனர். எல்லாரும் அவரது அகக்கண்ணுக்குத் தெரியவில்லை. மாறாகப் புறக்கண் முன் பிம்பங்களாகத் தோன்றினர்; மறைந்தனர்; அவர்களும் அப்படித்தான். இவரை ஒரு பயணியாகத்தான் எண்ணி நடக்கின்றனர். அவருள் உள்ள சோகம் புரியுமா என்ன?

என்ன நினைத்தாரோ, அறுபதை எட்டும் இந்த வயதிலும் வேலைக்குச் செல்ல வேண்டுமே! நாளைக்கு வேலைக்குச் செல்ல வேண்டுமே! வேலைக்கு விடுமுறை போட்டாலும்கூட நாளை மறுநாள் வேலைக்குப் போகக் கண்ணாடி வேண்டுமே! அதனால் அங்கிருந்து வெளியே வந்து கடைக்குப் போக எண்ணினார், குமரேசன். கையிலுள்ள ‘ஃபேர் கார்ட்’ எனப்படும் பயண அட்டையை அதற்குரிய இயந்திரத்தில் நுழைத்தார். அது நுழைய மறுத்தது. ‘கோ டு கன்ட்ரோல் ஒன்’ என்கிற ஆங்கில வாசகம் இயந்திரத்தில் தெரிய, காலாவதியான அட்டையுடன், ‘கன்ட்ரோல் ரூம்’ என எழுதப்பட்ட கண்ணாடிக் கூண்டு போல் தெரிந்த கட்டுப்பாட்டு அறை முகப்புக்குச் சென்றார். அட்டையை அதிகாரியிடம் தந்த குமரேசன், தன் சோகக்கதையை, அதுதான்... கண்ணாடி பற்றிய செய்தியை அவர் காதில் இரத்தினச் சுருக்கமாகப் போட்டார்.

அதிகாரியின், “நோ ப்ராப்ளம்! டோன்ட் ஒர்ரி!” என்கிற நான்கு வார்த்தைகள்! குமரேசனின் முகத்தில் நூறு வாட் வெளிச்சத்தைக் கொணர்ந்தது. “உங்கள் கண்ணாடி பிளாஸ்டிக்கால் ஆனது என்றால் கவலை வேண்டாம். ஆனால் உங்கள் கண்ணாடி, ரயிலில் சக்கரம் பதியும் தண்டவாள இரும்புக் கம்பி மீது படாதிருக்க வேண்டும்! எதற்கும் கவலை வேண்டாம். நல்லதாகவே நடக்கும்” என்று அவர் மேலும் ஆங்கிலத்தில் ஆறுதல் கூறியதும், தன்னைப் பற்றிய தகவல்களைத் தர, பேனாவை எடுத்தார் குமரேசன். தன் கண்ணின் பாவையாம் கண்ணகியைக் கண்ணாடிவழித் தினமும் பார்க்க நம்பிக்கை தந்த, மறு உயிர்ப்புத் தந்த சீன அதிகாரியைக் கடவுளாய் நினைத்துக் கை கூப்பினார்.

நன்றி - முனைவர் சீதாலட்சுமி

சிங்கப்பூர் பொன்விழாக் சிறுகதைகள்



More papers at www.testpapersfree.com

## பின்னிணைப்பு 2

### பட்ட மரம்

வெட்ட வெளிதனிலே – அந்த
வெய்யவன் பார்வையிலே
பட்டுக் கருகினையோ? – மழை
பாரா துருகினையோ?

இலையெனும் நாவதனால் – காற்றில்
இன்னிசை பொழிந்திருந்தாய்
மலரெனும் புன்னகையால் – மனதில்
மகிழ்ச்சியைச் செய்திருந்தாய்.



More papers at www.testpapersfree.com

இலையில்லை மலருமில்லை – நெஞ்சம்
இச்சைகொள் பச்சையில்லை;
கலைவளர் புள்ளினமும் – கிளையாம்
கரங்களில் காணவில்லை!

யாவும் இழந்தனையே! – பெரும்
ஏக்கம் பூண்டனையோ?
கூவும் மனத்துயரை – வெளியே
கூறும் திறமிலையோ?

திசைதோறும் கிளைவிரித்தே – ஆடித்
திளைத்ததோர் காலமதில்
வசையறப் பல்லுயிரும் – நாடி
வந்ததை எண்ணுவையோ?

பட்ட மரமாகி – நிலை
பாரில் தாழ்ந்தவுடன்
விட்ட உறவெண்ணி – உள்ளம்
வெம்பிக் கருகுவையோ?

கனியுடன் நிழல்கொடுத்தே – வாழும்
காலத்தில் உதவிநின்றாய்!
இனியும்இம் மாநிடர்க்கே – விறகாய்
எரிந்திட உனைத்தருவாய்!

முற்றிலும் பற்றறுத்த – தவ
முனிவனுக் கிணையானாய்
கற்றனன் பலபாடம் – உன்பால்!
கனவிலும் நான்மறவேன்!

நன்றி – கவிஞர் க.து.மு. இக்பால்

இதய மலர்கள்



More papers at www.testpapersfree.com